**தலைப்பு 328 - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 328 - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் அடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே மாதம் 10ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே மாதம் 09ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்கவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஆகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு பொருட்டு பயனுறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணப்படுகிறது என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன், அம்முறைமையின் பயனுறுத்தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு மேற்கொண்டு அதற்கேற்ப முறைமையினை பயனுறுவாக பேணுவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதலும் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளார்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன என,

(ஆ) முன்னைய ஆண்டுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை கணக்கில் பதியும்போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி அல்லாத சொத்துக்களை கணக்கில் பதிதல் தொடர்பான திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தின் 05/2023 இலக்க அறிவுறுத்தல்கள் தொடரின் பிரிவு 8.2 பிரகாரம், நிதி அல்லாத சொத்துக்கள் இருப்பின், அவை முறையாக இனங்காணப்பட்டு, கிரயம் அல்லது கிரயம் இனங்காணப்பட முடியாத சந்தர்ப்பங்களில் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் கணக்கில் பதிதல் வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட மினி வான் வண்டியின் பெறுமதியை இனங்கண்டிருக்கவில்லை என்பதுடன் பதிவு செய்வதற்கு செலவழிக்கப்பட்ட ரூபா 1,500,000 மட்டுமே Cigas நிகழ்ச்சிதிட்டத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | மினி வான் வண்டியின் கொள்வனவுப் பெறுமதி எமது திணைக்களத்தில் இல்லை என்பதுடன், எதிர்காலத்தில் அதன் பெறுமதியை மதிப்பீடு செய்து, Cigas நிகழ்ச்சிதிட்டத்தில் சொத்தாக சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என. | சொத்து கிரயத்தை சரியாக கணக்கில் பதிதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 மூலதனச் செலவு விடயங்களில் எஞ்சிய நிதியேற்பாட்டினை பயன்படுத்தி 2023 திசெம்பர் 28ஆம் திகதியன்று ரூபா 548,435 செலவில் ஒரு கெமரா மற்றும் துணைகருவிகளும், ரூபா 352,000 செலவு செய்து மடிக்கணினி ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பெறுகை திட்டத்தில் இந்த பெறுகைகள் அடங்கியிருக்கவில்லை. பெறுகை தேவைப்பாடு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில் எவ்வித திருத்தமும் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட மடிக் கணினிகள் செயலிழந்த நிலை காரணமாக அல்லது பழுதுபார்ப்பதற்கு 2022 ஆம் ஆண்டு இறுதியில் இருந்து, பிரதான அலுவலகத்திற்கு கிடைத்த வண்ணம் உள்ளன. மடிக் கணினி மற்றும் கெமரா அதற்கான துணைக்கருவிகள் என்பன அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தில் அடங்கியிருக்கவில்லை என்பதுடன், இந்த கொள்வனவு அவசியமானது என்பதனாலும், திணைக்கள கணக்கு கொடுத்துதீர்த்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள காரணத்தினாலும் பெறுகைத் திட்டத்தை நாளதுவரைப்படுத்த முடியாமற்போனது. அத்தகைய தவறு எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு உரிய அலுவலர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது என. | பெறுகை திட்டமொன்றை தயாரித்து குறித்த திட்டம் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை செய்துகொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பந்தி 01 பிரகாரம், 2017 ஆம் ஆண்டு முதல் வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற நிதியேற்பாடுகள் உன்னத மட்டத்தில் பயன்படுத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டின் வரையறைகளை விஞ்சி பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை | 2017 ஏப்ரல் 27ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பந்தி 01 பிரகாரம், நிதியேற்பாட்டு வரையறைகளை விஞ்சி பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை செய்துகொள்ளக்கூடாத போதிலும், 328-1-1-0-1404 செலவு விடயம் பொருட்டு வருடாந்த பாதீட்டு | அங்கீகரிக்கப்பட்ட் வரையறைகளை விஞ்சி பொறுப்புக்களை செய்துகொள்ளக்கூடாது. |

| | |
|---|---|
| செய்துகொள்ளக்கூடாத போதிலும், **328-1-1-0-1404** செலவு விடயத்தின் கீழ் நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா **5,829,089** பொறுப்பொன்று செய்துகொள்ளப்பட்டிருந்தது. | மதிப்பீட்டிலிருந்து வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் அளவு கட்டட வாடகை செலுத்துவதற்கு போதுமானதாக இருக்கவில்லை. இது கட்டாயமாக உறப்பட வேண்டிய செலவு ஆதலால், திறைசேரியிலிருந்து வழங்கப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டின் மத்தியில் நிதியேற்பாட்டினை விஞ்சி பொறுப்பொன்று செய்துகொள்ள நேரிட்டது என. |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தர் செய்யவேண்டிய உறுதிப்பாடு

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி, கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்பாடு செய்ய வேண்டியபோதிலும், அதன்படி செயலாற்றியிருக்கவில்லை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கான பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்து பேணப்படுகிறது என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதியளிக்க வேண்டியதுடன், அந்த முறைமையின் பயனுறுத்தன்மை பற்றி அவ்வப்போது மீளாய்வுசெய்து அதற்கிணங்க முறைமையை பயனுறு விதத்தில் பேணுவதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும் எனவும், அந்த மீளாய்வுகளை எழுத்துமூலமாக செய்து அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்க வேண்டியபோதிலும், அத்தகைய மீளாய்வுகள் செய்யப்பட்டமைக்கான கூற்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கட்டுப்பாட்டினை பயனுறு விதத்தில் பேணுவதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்பட்டபோதிலும், அந்த முறைமையின் பயனுறுத்தன்மை பற்றி மீளாய்வுசெய்து அதற்கிணங்க , முறைமையை திறம்பட மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதுடன், அதுபற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றை சமர்ப்பிக்க முடியாமற்போனதுடன், எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றை சமர்ப்பித்து அது சரி செய்யப்படும் என. | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை பயனுறுவாக பேணுவதாக உறுதியளிக்க வேண்டும். |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வுப் பணியை உரியவாறு செயற்படுத்துவதற்கு பயனுள்ள முறையியலொன்று உள்ளதென கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதியளிக்க வேண்டிய போதிலும், அறிக்கையின் பந்தி | திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கான வெற்றிடம் இருப்பதாக அரசாங்க நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு தொடர்ச்சியாக | உள்ளகக் கணக்காய்வினை உரியவாறு மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | |
|---|---|
| **4.1** இல் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளின்படி, அந்தத் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காளர் சேவையில் கிட்டத்தட்ட 500 வெற்றிடங்கள் இருப்பதனால், இந்தக் கோரிக்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை.<br>ஆகையினால், அந்த பதவியில் பதில்பணியாற்றுவதற்கு அல்லது கடமை மேவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளாகத்தின் கணக்காளர் சேவை அலுவலர்களிடமிருந்து கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என. |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி<br><br>ரூபா. | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| (i) | நி.பி.104 (i) | | இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டவுடன், அதன் பெறுமானம் மற்றும் காரணங்களை உறுதியாகக் கண்டறிவதற்கும், அதற்கு பொறுப்பானவர்களை இனங்காண்பதற்கும் விசாரணைகள் தொடங்கப்பட வேண்டியபோதிலும், திணைக்களத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் மீளாய்வாண்டில் விபத்துக்குள்ளாகிய போதிலும், உரிய நிதிப்பிரமாணம் பிரகாரம் | இது தொடர்பாக, தற்போது விசாரணைக் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதன்படி எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படுமென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயலாற்றி இருக்கவில்லை. | | |
| (ii) | நி.பி.880 | அரச நிதி, வருவாய் அல்லது உடமைகளைப் பெறுதல் அல்லது பொறுப்பில் வைத்தல், அல்லாவிடின் அரச நிதி விநியோகிப்பது அல்லது முத்திரைகள் அல்லாவிடின் உடமைகளை வழங்குதல் தொடர்பில் நிர்வாகரீதியாக பொறுப்பு கூறவேண்டிய அல்லது அதிகாரமளித்தலின் கீழ் குறித்த பணிகள் ஒப்படைப்பட்ட உத்தியோகத்தர்களும் அரசாங்கக் கணக்குகள் தொடர்பான வவுச்சர்களை சான்றுப்படுத்துகின்ற, காசோலைகளில் கையொப்பமிடுபவர்களும் தமது கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுகிறார்கள் என 612 ஆவது அதிகாரமான அரச உத்தியோகத்தர்களின் பிணைப்பொறுப்புக் கட்டளைச்சட்டத்தின்படி பிணைப்பொறுப்பு வைக்க வேண்டியபோதிலும் அத்தகைய பிணைப்பொறுப்பு வைத்தல் அவதானிக்கப்படவில்லை. | இந்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இதுவரையில் பிணைப்பொறுப்பு வைக்கவில்லை என்பதனால், அதுபற்றி தீர்மானித்தல் அரச நிதி சுற்றறிக்கை 07/2019 இன்படி அமைச்சின் செயலாளரால் செய்ய முடியும் என்பதனால் அதுதொடர்பாக அமைச்சின் செயலாளரிடம் வினவுமாறு தற்போதைய பணிப்பாளர் நாயகம் எழுத்துமூலம் அறிவுறுத்தினார். | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1640/31 இன்படி, மனிதவலு மற்றும் | தற்போது, தேசிய மனித வளம் மற்றும் வேலைவாய்ப்பு கொள்கை தொடர்பாக தேசிய மனித வள அபிவிருத்தி பேரவை (NHRDC) | நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு செயலாற்றுதல் |

| | | |
|---|---|---|
| வேலைவாய்ப்புத் திணைக்களத்தை தாபிப்பதன் நோக்கங்களில் ஒன்றான தேசிய மனிதவலுக் கொள்கையைத் தயாரித்து அமுல்படுத்த வேண்டியபோதிலும், குறித்த நோக்கங்கள் 2023 ஆம் ஆண்டளவிலேனும் நிறைவேற்றிக் கொள்ள முடியாமற்போனது. 2015 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட கொள்கைக் கட்டமைப்பினை தயாரித்து 05 வருடங்களுக்கு மேலாகியும், அதனை மீளத் திருத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான எவ்வித கொள்கையும் அவதானிக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதுடன் அதற்கு ஏற்புடையதாக தேசிய மனித வள அபிவிருத்தி பேரவையிடம் வினவிய கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | வேண்டும். |

## 3.2 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியச் சந்தைக்கு மிகவும் பொருத்தமான திறன்களைக் கொண்ட மனித வளத்தை உருவாக்குவதற்கான செலவின விடயத்தின் கீழ், 13 மேம்பாட்டு வீடியோ நிகழ்ச்சித்திட்டங்களையும், தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 6 மேம்பாட்டு வீடியோக்களையும் உருவாக்குவதற்கு ரூபா859,935 செலவிடப்பட்ட போதிலும் குறித்த பணிகள் முடிவடைந்திருக்கவில்லை. . | 328-2-2-4-2509 என்ற செலவு தலைப்பின் கீழ் 06 மேம்பாட்டு வீடியோக்கள் (அதாவது 03 சிங்கள மொழிமூல மற்றும் அவை 03 தமிழ் மொழிமூல மொழிபெயர்ப்புகளாக) தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இங்கு 03 சிங்கள வீடியோக்கள் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதுடன், அந்த சிங்கள வீடியோக்களில் சிற்சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது. தற்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், அவை முடிவடைந்த பின்னர தமிழ் மொழி மொழிமூல வீடியோக்கள் திருத்தப்படவுள்ளன என. | பணிப்பொறுப்புக்களை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 எதிர்பார்த்த பிரதிபலன்களை (Outcome) பெற்றுக்கொள்ளாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் கடமைகளை மிகவும் வினைத்திறனாகவும், திறம்பட நிறைவேற்றும் நோக்கில், உள்ளக முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை உருவாக்குவதற்கு 2021 ஆம் ஆண்டில் ஒரு தனியார் நிறுவனத்துடன் செய்துகொண்ட உடன்பாட்டின்படி, முதல் கட்டம் பொருட்டு ரூபா 2,060,615 செலுத்தப்பட்டிருந்தது. இந்த முறைமை மூலம் நிகழ்ச்சித்திட்ட திட்டமிடல், கைத்தொழில் சந்தை தகவல் தயாரித்தல், லீவு ஆவணங்கள் தயாரித்தல், பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் இடமாற்றல் முகாமைத்துவம் போன்ற பிரிவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், ஊழியர்களின் தனிப்பட்ட கோப்பு தகவல் மட்டுமே முறைமையினுள் இருந்ததுடன், ஏனைய எதிர்பார்த்த தகவல்கள் செயல்பாட்டு முறைமை ஊடாக இடம்பெறுகிறதென உறுதிப்படுத்தப்படவில்லை. | இந்த தகவல் முறைமையின் முதல் கட்டத்தில், நிகழ்ச்சித்திட்ட திட்டமிடல், கைத்தொழில் சந்தை தகவல் தயாரித்தல், லீவு ஆவணங்கள் தயாரித்தல், பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் இடமாற்றல் முகாமைத்துவம் போன்ற பிரிவுகள் அடங்கி இருந்ததுடன், செலவு முகாமைத்துவம் மற்றும் வாகன முகாமைத்துவம் என்பன இந்த முறைமையின் முதல் கட்டத்தில் அடங்கியிருக்கவில்லை என. | நிதி ஈடுபடுத்தும்போது எதிர்பார்த்த பிரதிபலன்களை பெற்றுக்கொள்வதற்கு கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். |

### 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திற்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்று 2023 மே 11 ஆம் திகதியன்று ரேடியேட்டரின் மேல் பார் பகுதி வெடித்ததால், கடுகதி வீதியில் தலவத்துகொடையில் உள்ள கராஜுக்கு பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டது. உரிய கராஜ் 2023 மே 25 ஆம் திகதி பழுதுபார்ப்பதற்காக | ஜீப் வண்டி கடுகதி வீதியில் 2023.05.11 ஆம் திகதி ஏற்பட்ட கோளாறு குறித்து சாரதி அறிவித்தலின் பேரில் (தொலைபேசி மூலம்) கேரியர் சகிதம் விலை மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு போக்குவரத்து முகாரி மூலம் வழங்கப்பட்ட பரிந்துரையின் பேரில் சம்பந்தப்பட்ட வாகனம் மோட்டர்ர்ஸ் நிறுவனம் ஒன்றிக்கு அனுப்பப்பட்டது. வாகனம் பழுதுபார்ப்பது தொடர்பாக அப்போதைய போக்குவரத்து முகாரி | வாகன பழுதுபார்த்தல்களை உரிய சோதனையுடனும் மேற்பார்வையுடனும் மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | |
|---|---|
| ரூபா **1,551,000** செலவுமதிப்பீட்டைச் சமர்ப்பித்திருந்ததுடன், அதற்கான விலைகள் மற்றும் பழுதுபார்த்தல்களை அந்த நிறுவனம்மூலம் செய்வித்துக் கொள்ளுதல் உகந்தது என்ற பொறிமுறை பொறியியலாளரின் பரிந்துரையை வழங்குவதற்கு மூன்று மாத காலதாமதம் ஏற்பட்டிருந்தது. ரேடியேட்டரின் மேல் பார் பகுதி வெடித்தமையினால் ஏற்பட்ட சேதம் என பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன், அந்த சேதத்தினால் ஏற்படாத வேலைகள் பொருட்டு சகல உதிரிப்பாகங்கள் இடப்பட்டு பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மற்றும் பொறிமுறை பொறியியலாளரின் பரிந்துரைகள் அடங்கிய கடிதங்கள் இணைக்கப்பட்டுள்ளன.<br><br>இந்த நிகழ்வுக்குப் பின், 2023 மே மாதம் இந்தத் திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த புதிய பணிப்பாளர் நாயகம், குறித்த விலை மதிப்பீடானது அதிக பெறுமதி கொண்டமை காரணமாக இந்த வாகனத்தின் பழுதுபார்த்தலை பெறுகைக் குழுவின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ள முடிவு செய்துள்ளார். புதிய பணிப்பாளர் நாயகம், திணைக்கள வாகன பராமரிப்புக்கென புதிய பொறிமுறை பொறியியலாளர் ஒருவரை நியமித்துள்ளார். மேலே குறிப்பிட்ட அனுப்பப்பட்ட விலை மதிப்பீட்டிற்கான புதிய பொறிமுறை பொறியியலாளரின் பரிந்துரையை 2023.08.22 ஆம் திகதி பெற்ற பிறகு, அந்த விலை மதிப்பீட்டை பெறுகைக் குழுவிற்கு அனுப்பி உரிய பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டது என. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவைகள் பிரிவினால் நடத்தப்படும் தொழில் சந்தை மற்றும் உயர்தொழிலர் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது, அது தொடர்பான வீடியோக்கள் தயாரித்தல், இணையத்தளத்தில் வெளியிடுதல், முகநூல் பக்கம் வெளியிடுதல் பொருட்டு ரூபா **548,435** செலவு செய்து ஒரு கெமரா மற்றும் துணைக்கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டன. 2022 ஆம் ஆண்டில், இந்த | பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவைகள் பிரிவின் வேண்டுகோளின் பேரில் இந்த கெமராவை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், 328-1-1-0-2102 தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் செலவு விடயத்தின் கீழ் கெமராவும், அதன் துணைக்கருவிகள் 328-1-1-0-2002 பொறி மற்றும் உபகரணங்கள் (improvement) செலவு விடயத்தின் கீழ் நிதியேற்பாட்டினை பயன்படுத்தி பெறுகை செயன்முறையைப் பின்பற்றி கொள்வனவு செய்யப்பட்டன. | சொத்து தேவைப்பாட்டின்படி பெறுகை செய்ய வேண்டியதுடன் உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்தலும் வேண்டும். |

| | |
|---|---|
| தேவைகளுக்காக ரூபா 5,228,193 செலவு செய்து 30 கெமராக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், வீடியோ ஆக்கங்களை தயாரிப்பதற்காக 2023 ஆம் ஆண்டிலும் ரூபா 859,935 வெளி நிறுவனத்துக்கு செலுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கெமராவில் மேற்கூறிய வசதிகள் இல்லை என்பதுடன் (வீடியோவுக்கே பிரத்தியேகமான) முக்கியமாக வெளிக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்காக பெறப்பட்ட கெமரா என்பதுடன் அக்கெமராக்கள் மாவட்டங்கள் பொருட்டு வழங்கப்பட்டிருப்பதனால், மேலே குறிப்பிட்ட தேவைப்பாட்டின் நிமித்தம் புதிய கெமரா ஒன்று பெறப்பட்டது என. |

### 3.6 பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தால் பராமரிக்கப்படும் கட்டடம் பொருட்டு நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டு தனியார் கம்பனிக்கு, மாதாந்த குத்தகை தவணை ரூபா 3,548,342 வீதம் வருடாந்தம் ரூபா 42,580,104 செலவை செலுத்துவதற்கு நேரிட்டுள்ளதுடன், அமைச்சுடன் செயலாற்றுதல் மற்றும் நிர்வாக வசதிகள் பொருட்டு செயல்பாட்டு இல்லம் அல்லது தொழிலாளர் செயலக கட்டடத்தில் பயன்படுத்தப்படாத வளாகத்தில் தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தத் திணைக்களத்தை செத்சிறிபாய இரண்டாவது மாடி வளாகத்தில் கொண்டுநடத்தியதன் காரணமாக உறப்படுகின்ற செலவைக் குறைக்கும் வகையில் செயலக வளாகத்திற்கு அல்லது செயல்பாட்டு இல்ல கட்டடத்தை பழுதுபார்த்து மாற்றுவதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு முன்மொழிந்துள்ள போதிலும், இது சம்பந்தமாக முறையான விழிப்பூட்டல் செய்யப்படாமையினாலும், அதுவரை இந்த திணைக்களத்தை கொண்டுநடத்துவதற்கு ஒரு வளாகம் தேவை என்பதால், அதுதொடர்பில் முறையான முடிவு எடுக்கப்படும் வரை திணைக்களம் இந்த வளாகத்தில் தொடர்ந்தும் கொண்டுநடத்தப்படும் என. | மிகவும் வினைத்திறனாக திணைக்களத்தை கொண்டுநடத்தும் செலவுச்சுமை உறப்படுதல் வேண்டும். |

## 4. நல்லாட்சி

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(i)(ஊ) ஆம் பிரிவு பிரகாரம், | திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கான வெற்றிடம் இருப்பதாக அரசாங்க நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் | பொருத்தமான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். |

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பின் கீழ், உள்ளகக் கணக்காய்வு கடமைகள் மற்றும் பணிகளை உரியவாறு செயற்படுத்துவதற்கு பயனுள்ள முறையியல் இருப்பதை உறுதியளிக்க வேண்டிய போதிலும், திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி பல ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்தமையினால், அந்த பணிகள் முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

உள்ளூராட்சி அமைச்சுக்கு தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காளர் சேவையில் கிட்டத்தட்ட 500 வெற்றிடங்கள் இருப்பதனால், இந்தக் கோரிக்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை.

ஆகையினால், அந்த பதவியில் பதில்பணியாற்றுவதற்கு அல்லது கடமை மேவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளாகத்தின் கணக்காளர் சேவை அலுவலர்களிடமிருந்து கோரிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2023-09-27 திகதியிட்ட கடிதமொன்று அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என.